கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

திட்டக்குடி.

**OS.102/2013** **PW: 3** **28.07.2025**

2025 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 28 ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய கோவிந்தன் என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.)ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தன் | வயது | 75 |
| த/க. பெயர் | அப்பாசாமி | தொழில் | விவசாயம் |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | கோழியூர் |
| மாவட்டம் | கடலூர் | | |

## <u>குறுக்கு விசாரணை</u>

நான் 4 – 5 வருடங்களாக கோழியூர் தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் சிறுவயதிலிருந்தே கோழியூர் வடக்குத் தெருவில் வசித்து வந்தேன். வழக்கு சொத்து எந்த தெருவில் உள்ளது என்றால் புதுத்தெரு. வாதி மற்றும் பிரதிவாதிகள் அங்கு தான் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதியின் பச்சமுத்துவின் தகப்பனார் பெயர் சின்னதம்பி. சின்னதம்பியின் உடன் பிறந்தவர்கள் ஆதிமூலம், பவுன், காசாம்பு, பெரிய பெண் பெயர் எனக்கு தெரியாது. சின்னதம்பியுடைய அப்பா பெயர் என்ன வென்றால் எனக்கு தெரியாது. ஆண் வாரிசுடன் பிறந்தால் தான் பங்காளி முறை வரும், பெண் வாரிசுடன் பிறந்தால் உறவு முறை மட்டும் தான் வரும் என்றாலும் இந்த வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதுவரைக்கும் நான் தாவா சொத்தை பார்த்ததில்லை. பச்சமுத்து எங்கு குடியிருக்கிறார் என்றால் கீழ்மேல் தெருவில் வடபுறம் சரகில் பள்ளிக்கட்டிடத்திற்கு மேல்புறத்தில் வசித்து வருகிறார். மொத்த விஸ்திரனம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது, 4.5 செண்ட் என்று சொன்னார்கள். ஆதிமூல கோனாருக்கு 5 செண்ட் கிரயம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும், பள்ளிக்கூடத்திற்கு வடபுறமும், பச்சமுத்து குடியிருக்கும் வீட்டிற்கு வடபுறமும் கிரயம் கொடுக்கப்பட்டது. பச்சமுத்து வீட்டிற்கு வடபுறத்தில் ஆதிமூலகோனாரின் பேரன் பொன்னுசாமி என்பவர் வீடு கட்டியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பச்சமுத்து குடியிருக்கும் வீட்டிற்கும் பொன்னுசாமியின் சொத்திற்கும் இடைப்பட்ட காலி மனை பச்சமுத்துவுக்கு சொந்தமானது என்றால் சரிதான். தனபால் ஏட்டு என்பவருக்கும் பச்சமுத்து பாகத்தைப்போல் அவருக்கும் உண்டு என்றால் சரிதான். தனபால் இடம் எங்கு உள்ளது என்றால் பச்சமுத்து அவர்களின் வீட்டிற்கு மேல்புறத்தில் உள்ளது. பச்சமுத்து வீட்டிற்கு மேல்புறத்தில் ஆதிமூலம் குடியிருந்தார் என்றாலும் தற்போது அவர் இல்லை அவர் மனைவி மற்றும் மக்கள்

குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.ஆதிமூலத்தின் மனைவி சின்னபிள்ளை குடியிருப்பது ஏட்டு தனபால் என்பவரின் இடம் என்றாலும் பச்சமுத்து குடும்பத்திற்கு பாத்தியமான இடம் என்றாலும் சரிதான் அதில் கிரயம் வாங்கியுள்ளார். வாதிகள் குடியிருக்கும் இடம் தனபாலுக்கு பாத்தியமானது என்றாலும் அவர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அந்த இடத்திற்கு பாத்தியமானது என்றாலும் சரிதான் ஆனால் அவர்கள் கிரயம் வாங்கி உள்ளார்கள். இந்த வழக்கிற்காக வாதிக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(S/d. N.Shalini)**
Additional District Munsif,
Tittagudi.